**செ.வெ. எண்: 752** **நாள்: 14.12.2011**

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் ஆணைப்படி 14.12.2011 அன்று சென்னை-5, சேப்பாக்கம், எழிலகம் கட்டிடத்தில் 4வது தளத்தில் உள்ள உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் சென்னை நகர உதவி ஆணையாளர்கள் பணி ஆய்வு கூட்டம் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தில் அரசுச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை திருமதி.M.P.நிர்மலா அவர்கள், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. P.M. பஷீர் அஹமது அவர்கள் மற்றும் அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள், சென்னை நகர துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு/தெற்கு, உதவி ஆணையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவுரைகளை வழங்கினார்கள்.

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி உட்பட அனைத்து அத்தியாவசிய பொருள்களும் நல்ல தரத்துடன் வழங்க வேண்டுமென கண்டிப்பான அறிவுரைகள் வழங்கியுள்ளதை சுட்டிக் காட்டி அலுவலர்கள் பொது விநியோகத்திட்ட செயல்பாடுகளை செம்மையாக ஆற்றி தரமான அத்தியாவசிய பொருள்களை நியாய விலை அங்காடிகள் மூலம் அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.
- நியாய விலை அங்காடிகளில் அனைத்து அத்தியாவசிய பொருள்களும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு தகுதியும், தேவையுமுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது குடும்ப அட்டைக்கு உரிய தகுதியான அளவினை எந்தவித இடர்பாடும் இன்றி வழங்க வேண்டும்.
- நியாய விலை அங்காடிகள் அனைத்தும் பணி நாட்களில் பணி நேரங்களில் திறக்கப்பட்டு அத்தியாவசிய பொருள்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்படுவதை அடிக்கடி ஆய்வு செய்து உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.
- குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருள்கள் உரிய அளவில் எடைகுறைவின்றி வழங்கப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது புகார்கள்/ஆலோசனைகளை தெரிவிக்க ஏதுவாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அரசுச் செயலாளர், ஆணையாளர் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள், இணைப்பதிவாளர்கள், முதுநிலை மண்டல மேலாளர்கள், துணை ஆணையாளர் (நகரம்) வடக்கு/தெற்கு, வட்ட வழங்கல் அலுவலர்கள், உதவி ஆணையாளர்கள் ஆகியோரின் தொலைபேசி எண்கள் அனைத்து நியாய விலை அங்காடிகளிலும் குடும்ப அட்டைதாரர்கள் நன்கு அறியும் வண்ணம் தெளிவாக எழுதி வைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| மாண்புமிகு உணவு அமைச்சர் | 044-25671129 | |
| அரசுச் செயலாளர் | 044-25672224 | |
| ஆணையாளர் | 044-28592255 | 9445464748 |
| மாநில நுகர்வோர் சேவை மையம் | 044-28592828 | 7299998002<br>7280018002 –(குறுந்தகவல் மூலம் புகார் தெரிவிக்க) |

- எரிவாயு இணைப்பு பெற்றுள்ள குடும்ப அட்டைதாரர்களின் விவரங்களை அந்த குடும்ப அட்டைகளில் முத்திரையிட்டு அவ்வாறு சேமிக்கப்படும் மண்ணெண்ணெயை எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டைதாரர்களுக்கு விடுதல் ஏதுமின்றி பகிர்ந்து வழங்குவதற்கு முனைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பொது விநியோகத்திட்ட அத்தியாவசிய பொருள்கள் கடத்தல் குறித்து தகவல் சேகரித்து அத்தகைய நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**

-